திருநெல்வேலி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

அனுமதி ஆணை எண். 1/24

சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாகப் பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

திருநெல்வேலி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் தென்காசி, அம்பாசமுத்திரம், சங்கரன்கோவில், வள்ளியூர், செங்கோட்டை, நாங்குநேரி, சேரன்மகாதேவி, சிவகிரி மற்றும் ராதாபுரம் ஆகிய ஊர்களில் இயங்கும் வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற கீழ் குறிப்பிட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்தகுடிமக்கள்
- சமூகப் பணியில் முதுநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.
- அங்கன்வாடிப் பணியாளர்கள்
- மருத்துவர்கள் / உடல்நல நிபுணர்கள்
- மாணவர்கள் மற்றும் சட்ட கல்லூரி மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராகப் பதிவு செய்யும் வரை)
- அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூகசேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப்பிரமுகர்கள்
- மகளிர் குழுக்கள், மைத்ரிசங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடங்கிய சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்.
- மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

| | | |
|---|---|---|
| 1. | கல்வித்தகுதி | பள்ளி இறுதிவகுப்பில் (10ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவராகவும், விரிவாகப் புரிந்துணரும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.<br><br>கணிணி மூலம் ஆங்கிலம் மற்றும் தமிழ் வழி தட்டச்சு தெரிந்திருத்தல் அவசியமாகும். |
| 2. | இதர தகுதிகள் | சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் இரக்கம், ஏனையவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல், எவ்வித பணப் பயனும் எதிர் பார்க்காமல் தன்னார்வ சேவை புரிதல், தங்கள் |

| | | |
|---|---|---|
| | | பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் இச்சமூகத்தின் பலவீனமான பிரிவினர், வறியவர்கள் ஆகியோரை மேலுயர்த்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |
| 3. | வயது | 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| 4. | மதிப்பூதியம் | பணிபுரியும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 500/- மதிப்பூதியமாக வழங்கப்படும் |
| 5. | விண்ணப்பிக்க கடைசி நாள் | 15.05.2024 நேரம் மாலை 5.45. |
| 6. | பணிகாலம் | தேர்வு செய்யப்படும் நாளிலிருந்து ஓர் ஆண்டு |

விருப்பமுள்ளவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை நிரப்பி பதிவு தபாலில் கீழே கண்ட முகவரிக்கு **15.05.2024** அன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கப் பெறுமாறு அனுப்பக் கோரப்படுகிறது. மேலும் விண்ணப்பதாரர்கள் அவர்களின் மின்னஞ்சலை (Email ID) விண்ணப்ப படிவத்தில் கண்டிப்பாக தெளிவாக தெரியப்படுத்த வேண்டும். விண்ணப்பதாரரின் நேர்காணல் தேர்வு குறித்த அறிவிப்பு மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தகவல் வழங்கப்படும். நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ நேர்காணல் அழைப்பு வழங்கப்பட மாட்டாது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
**தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி**
**திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்**
**பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002**

# திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

சட்டம் சார்ந்ததன்னார்வ தொண்டர்கள் சேர்க்கைவிண்ணப்பப்படிவம்

| |
|---|
| பாஸ்போர்ட் சைஸ் போட்டோஒட்ட வேண்டும் Pass Port Size Photo to be affixed |

| | | |
|---|---|---|
| 1. | பெயர் (பெரியஎழுத்துக்களில்)<br>Name (In Capital Letters) | |
| 2. | பாலினம் / Sex | ஆண் /பெண் / திருநங்கை<br>(Male/Female/Transgender) |
| 3. | வயது / Age | |
| 4. | தகப்பனார் / கணவர் பெயர்<br>Father's/Husband's Name | |
| 5. | கல்வித் தகுதிகள்<br>Educational Qualifications | |
| 6. | தொழில் சார்ந்தகல்வித் தகுதிகள்<br>Technical Qualifications | |
| 7. | ஜாதிமற்றும் பிரிவு<br>Community / Caste | |
| 8. | மதம் / Religion | |
| 9. | அலுவலகவிலாசம் / Office Address | |
| 10. | வசிப்பிடவிலாசம் / Residential Address | |
| 11. | தொழில் / Occupation | |
| 12. | தொலைபேசி எண் / Telephone Number | |
| 13. | கைபேசிஎண் / Mobile Number | |
| 14. | மின்னஞ்சல் முகவரி/ E-mail Address | |
| 15. | எப்பகுதியில் சட்டம் சார்ந்ததன்னார்வதொண்டராகபணிசெய்யவிரும்புகிறீர்கள்:<br>Place in which willing to work as Para Legal Volunteers<br>☐<br>மார்க் செய்யவும் / Tick in the Appropriate Column | திருநெல்வேலி / Tirunelveli ☐<br>தென்காசி / Tenkasi ☐<br>அம்பாசமுத்திரம் / Ambasamudram ☐<br>சங்கரன்கோவில் / Sankarankovil ☐<br>ஆலங்குளம்/ Alangulam ☐ |

| | | | |
|---|---|---|---|
| | | வள்ளியூர் / Valliyoor | |
| | | செங்கோட்டை / Shencottah | |
| | | நான்குநேரி / Nanguneri | |
| | | சேரன்மகாதேவி / Cheranmahadevi | |
| | | சிவகிரி / Sivagiri | |
| | | ராதாபுரம் / Radhapuram | |
| 16. | தாங்கள் ஏற்கனவேசட்டம் சார்ந்ததன்னார்வதொண்டராகபணிபுரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்தபணிகள் குறித்துதெரிவிக்கவும். Whether you have already worked as P.L.V. ? If So, details or Service rendered to be stated. | | |
| 17. | குற்றவழக்குகளில ஏதேனில் நீவிர் சம்பந்தப்பட்டவராக இருந்தால் ,அதன் பற்றியவிவரம் | | |
| 18. | மேலும் தாங்கள் தெரிவிக்கும் தகவல்கள் / Other Informations, if any. | | |

நாள் / Date :

கையெழுத்து/ Signature

இடம் / Place :

குறிப்பு : சட்டம் சார்ந்ததன்னார்வதொண்டர்கள் பணிநிரந்தரபணி அல்ல. பணி நிரந்தம் செய்ய உரிமை கோரமுடியாது